**தலைப்பு 16 – பாராளுமன்றம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 16 – பாராளுமன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 செப்தம்பர் 14 ஆந் திகதி பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த ஏற்பாடும் செலவீனமும்**

---

பாராளுமன்றத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 2,437.44 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 2,152.55 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டிலான சேமிப்புக்கள் ரூபா 284.89 மில்லியன் அல்லது 11.69 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாடுகளின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,857.45 | 1,816.48 | 40.97 | 2.21 |
| மூலதனம் | 579.99 | 336.07 | 243.92 | 42.02 |
| **மொத்தம்** | **2,437.44** | **2,152.55** | **284.89** | **11.69** |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

பாராளுமன்றத்திற்கு உரிய 01601 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன்கள் | ரூபா. மில்லியன்கள் | ரூபா. மில்லியன்கள் | ரூபா. மில்லியன்கள் | ரூபா. மில்லியன்கள் | ரூபா. மில்லியன்கள் |
| 38.00 | 24.91 | 28.00 | 31.16 | 175 | 122.33 |

### 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

பாராளுமன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 7002/0000/00/0120/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 2.7 மில்லியனாக இருந்தது.

### 2.4 பொதுவைப்புக் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்றத்தின் 03 பொது வைப்புக் கணக்குகளின் மொத்த மீதிகள் ரூபா 43.75 மில்லியன் தொகையாகும். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்க இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன்கள் |
| 6000/0000/00/0016/0088/000 | 42.38 |
| 6000/0000/00/0016/0040/000 | 0.07 |
| 6000/0000/00/0018/0051/000 | 1.30 |
| **மொத்தம்** | **43.75** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பாராளுமன்றத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

## 3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

பாராளுமன்றத்தால் பின்வரும் பதிவேடுகள் நாளதுவரையாக்கபட்டிருக்காததுடன், சில ஏனைய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகைகள் | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | இலத்திரனியல் உபகரண பதிவேடு | நிதிப்பிரமாணம் 454 (2) | பராமரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | கையிருப்பு பதிவேடு | நிதிப்பிரமாணம் 454 (1) | நாளதுவரையாக்கப்படவில்லை. |
| (இ) | நட்ட பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்படவில்லை. |
| (ஈ) | வாகனங்களுக்கான சம்பவ குறிப்பு புத்தகங்கள் | நிதிப்பிரமாணம் 164 (அ) மற்றும் 1647 | நாளதுவரையாக்கப்படவில்லை. |

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

2015 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திற்கு மீளாய்வாண்டினுள் சமர்ப்பிக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அத்தகைய கணக்காய்வு ஐயவினாக்களுக்கு தொடர்புடைய அளவிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 5,132,904 தொகையாகும்.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 29 இன் 07/2015 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பந்தி (2) இன் பிரகாரம், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினங்களிற்காக 15 சதவீதம் மற்றும் 10 சதவீதம் சேமிப்பு நிச்சயமாக மேற்கொள்ள வேண்டிய போதிலும், ஏற்பாடுகளில் முறையே 03 சதவீதம் மற்றும் 02 சதவீதம் மாத்திரமே சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இனங்காணப்பட்ட தேவைப்பாடுகளுக்கிணங்க பாதீடு மதிப்பிடப்படாமையினால் 05 மூலதன விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளில் பயன்படுத்திய பின்னரான சேமிப்புக்கள் 34 சதவீதத்திலிருந்து 76 சதவீதத்திலிருந்தது.

(இ) ரூபா 37,076,274 தொகையான பொறுப்புக்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4 பொது வைப்புக் கணக்கு**

**05** வருடங்களை விஞ்சிய ரூபா 303,196 கூட்டுத்தொகையான 07 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

விடய இலக்கம் 01601 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 19 ஓய்வு பெற்ற மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,066,253 கூட்டுத்தொகையான கடன்மீதியில் உள்ளடங்கியிருந்த அத்தகைய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 414,539 கூட்டுத்தொகையான மீதி 12 வருடங்கள் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) சேவையை விட்டுச்சென்ற 16 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,238,831 கூட்டுத்தொகையான கடன் மீதியை உள்ளடக்கியிருந்த 11 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 866,732 தொகையான கடன் மீதி தொடர்பில் 12 வருடங்கள் முதல் 21 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டு வரப்பட்டவாறு இருந்த போதிலும், அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ஏனைய கடன் எனக் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 112,290 தொகையான கடன் மீதியினுள் காணப்படும் 2007 ஆம் ஆண்டு முதல் வருமதியாகவுள்ள இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 98,540 தொகையான கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.6 கணக்களித்தகைமையும் நல்லாளுகையும்

### 3.6.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 06 மற்றும் 07 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் முன் பரீட்சிப்பு உட்படுத்தப்பட்ட பின்னர் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 யூன் 09 இன் டீஎம்ஏ/2009 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கைகளை பந்தி 09 இன் பிரகாரம், உள்ளக கணக்காய்வு பிரிவால் வாகனங்களின் கிரயம் தொடர்பில் காலரீதியான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், அத்தகைய வாகன கிரயங்கள் தொடர்பில் சிக்கனம், வினைத்திறன் மற்றும் செயற்திறனை கருத்தில் கொள்வதை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 சனவரி 13 இன் டீஎம்ஏ/07 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையினால் கணனி தகவல் முறைமையின் உள்ளகக் கணக்காய்விற்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், சம்பளங்களை கணிப்பிடுவதற்கான மென்பொருளுடன் இணைக்கப்பட்ட சம்பளங்களின் கணிப்பீடு, பொது கட்டுப்பாட்டு பிரமாணங்கள் மற்றும் பொறிமுறை, கடப்பாடுகள் தொடர்பிலும் அத்தகைய மென்பொருள் பயன்படுத்துவதற்காக பின்பற்றப்படுகின்ற கட்டுப்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், தகவல் முறையில் குறைபாடுகளை காட்டுவதன் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்காததுடன் மேற்குறிப்பிடப்பட்ட வழிகாட்டிகளின் 11 ஆம் பந்தியின் பிரகாரம் சம்பளம் கணிப்பிடும் சூழ்நிலையில் ஸ்தாபிப்பு பிரிவு மற்றும் நிதிப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பொது கட்டுப்பாட்டு பிரமாணங்களிலிருந்து தகவல் முறைமை மற்றும் தவிர்த்தல் குறைபாடுகளை காட்டுவதன் மூலம் திருத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பாராளுமன்றத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 3.7.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

கீழே காட்டப்பட்ட சில சொத்துக்கள் விளைவற்றோ அல்லது குறைப்பயன்பாட்டுடனோ காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், வினைத்திறன், உரிமையாளர் மற்றும் நேர்மை தொடர்பான தேவைப்பாடுகளை முறையாக இனங்காணும் வகையில் நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் கொள்வனவு செய்யப்பட்ட சோளர் வெடி மருந்துகளின் 26 வகைகளிலிருந்து 123 அலகுகள் 2016 பெப்ரவரி 19 இலிருந்து 2017 மார்ச் 31 வரையான காலப்பகுதியின் போது எதுவும் விநியோகிக்காமல் களஞ்சியங்களில் விளைவற்றிருந்தது. அதற்கிணங்க, 13 வகையான மெதுவாக நகருகின்ற ரோனர் வெடிமருந்தின் இன் 113 பிரிவுகள் அந்த காலப்பகுதியின் போது சேமிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய உருப்படிகள் 10 வருடங்களிற்கு மேலதிகமாக காலாவதியான இருப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் செயற்படுத்தப்படாமையால் 153 ரயர்கள், 36 றிம்ஸ் மற்றும் 50 ரீயூப்கள் ரூபா 3,879,459 இற்கு கொள்வனவு செய்யப்பட்டது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்களுடன் அதனை சேர்க்கும் போது முழு இருப்புக்களிலிருந்து 385 ரயர்கள், 51 றிம்கள், 344 ரீயூப்புக்கள் 2017 ஆகஸ்ட் 17 இல் உள்ளவாறான இருப்புக்களிலிருந்தது. அந்த இருப்புக்களில் பயன்படுத்தக்கூடிய மற்றும் பயன்படுத்தமுடியாத இருப்புக்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 மே 11 இல் ஏனைய நிறுவகங்களிற்கு மாற்றப்பட்ட 02 வாகனங்களிற்காக 2016 யூன் 10 இல் ரூபா 278,320 க்கு 08 ரயர்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அவை களஞ்சியங்களிலிருந்தது. அத்தகைய 08 ரயர்கள் வேறு வாகனங்களுக்கு பயன்படுத்துவதற்காக இயலுமானதாக இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனத்திற்காக களஞ்சியங்களில் 6 ரயர்கள் இருந்த போதிலும், அதற்கு மேலதிகமாக 04 மேலதிக ரயர்கள் கொள்வனவு செய்யப்பட்டது. ஆனால் 2017 ஆகஸ்ட் 17 இலும் களஞ்சியங்களில் 16 ரயர்கள் இருந்த போதிலும் 02 ரயர்கள் மாத்திரம் 2016 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 05 வாகனங்களிற்காக 44 ரயர்கள் களஞ்சியங்களில் இருந்த போதிலும், அத்தகைய வாகனங்களுக்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 415,555 இற்காக மேலும், 28 ரயர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 72 ரயர்களின் இருப்பு எந்தவித வழங்கல்களும் இல்லாமல் 2017 மார்ச் 22 இலும் களஞ்சியங்களிலிருந்தது.

### 3.7.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அதற்கான அறிக்கை 2017 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை. பொருள் மெய்மையானது கடைசியாக 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பாராளுமன்றத்திற்கு சொந்தமான 09 வாகனங்கள் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா. | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 94 | 17,699,537 | கடப்பாடுகளிற்குள் ஈடுபடுவதற்கு இயலாது இருந்த போதிலும், 08 சேவைகள் அல்லது மீண்டுவரும் செலவின விடயங்களின் மற்றும் 03 மூலதன செலவின விடயங்களில் சேமிப்புக்களை விஞ்சி கட்டுப்பாடுகளில் ஈடுபட்டமை. |
| | (ii) | நிதிப்பிரமாணம் 104 (2)(3) | 2,352,254 | மீளாய்வாண்டின் போது ரூபா 50,000 க்கு மேலதிகமாக நட்டங்கள் மற்றும் சேதங்கள் ஏற்பட்ட 06 வாகன விபத்துக்கள் தொடர்பில் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருக்காததுடன், அத்தகைய 06 வாகன விபத்துக்கள் உள்ளடக்கிய 19 வாகன விபத்துக்கள் தொடர்பில் ஆரம்ப விசாரணைகளோ அல்லது முழு விசாரனைகளோ ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தை கொண்டிராத அலுவலகரொருவருக்கு கையளிக்கப்பட்ட வாகனமொன்றிற்கு பயணத்தின் போது 02 விபத்துக்கள் ஏற்பட்டதுடன் இரண்டாவது விபத்து தொடர்பில் காவல் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | நிதிப்பிரமாணங்கள் 755 (1) (2) | | பொருட்களிற்கு பொறுப்பாகவுள்ள களஞ்சியக் காப்பாளர் மற்றும் அலுவலகரொருவரை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் இருந்தபோதிலும், கையளிக்கும் மற்றும் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பௌதீக மீதி மற்றும் இருப்பு பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்து மேற்கொள்ளப்பட வேண்டும். ரயர் களஞ்சியங்களின் பொறுப்பை அவ்வாறு ஒப்பீடு செய்யாமல் 2014 நவம்பர் 19 இலிருந்து வேறொரு களஞ்சிய காப்பாளருக்கு கையளிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| **(ஆ)** | **பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | |
| | 1990 ஒக்தோபர் 10 இன் 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | எரிபொருள் நுகர்வானது ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிக்க வேண்டிய போதிலும், 54 வாகனங்களின் சராசரி எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** | **பொதுக் கணக்குகள் சுற்றறிக்கை** | |
| | 2013 சனவரி 24 ஆந் திகதிய எஸ்ஏ/ஏஸ்/ஏஏ ஆம் இலக்க சுற்றறிக்கை | பாராளுமன்றத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. |

**3.9 செயலாற்றல்**

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு, செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் பாராளுமன்றத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழ்வருமாறுள்ளன.

(அ) 2016 சனவரி 01 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 8 ஆவது பாராளுமன்றத்தின் 101 அமர்வுகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 97 அமர்வுகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அந்த 97 அமர்வுகளுக்காக பாராளுமன்ற கௌரவ உறுப்பினர்களின் வருகை பின்வருமாறுள்ளது.

| **பங்குபற்றல்** | **அமர்வுகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 51 இல் இருந்து 75 வரை | 01 |
| 76 இல் இருந்து 100 வரை | 01 |
| 101 இல் இருந்து 125 வரை | 13 |
| 126 இல் இருந்து 150 வரை | 21 |
| 151 இல் இருந்து 175 வரை | 45 |
| 176 இல் இருந்து 200 வரை | 11 |
| 201 இல் இருந்து 225 வரை | 05 |
| **மொத்தம்** | **97** |

மேற்குறிப்பிடப்பட்ட விபரங்களின் பிரகாரம், 225 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 150 இற்கும் அதிகமான அமைச்சர்கள் பங்குபற்றிய அமர்வுகளின் எண்ணிக்கை 61 ஆகவும் அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது நடைபெற்ற 97 அமர்வுகளில் 150 இற்கும் குறைவாக பங்குபற்றிய அமர்வுகளின் எண்ணிக்கை 36 ஆகவும் இருந்தது. மேலும், பாராளுமன்றத்தின்

கௌரவ உறுப்பினர்களுகளில் 200 பேருக்கு மேலாதிகமாக 05 அமர்வுகளில் பங்குபற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையிலான 05 வருடங்களின் போது பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் பாராளுமன்ற தலைப்பின் கீழுள்ள கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட சம்பளங்கள், கூலிகள், படிகள், பதவியணி செலவினங்கள், போக்குவரத்து மற்றும் எரிபொருள், காகிதாகிகள், போக்குவரத்து செலவினங்கள், உணவு மற்றும் குடிபானங்கள், அலுவலக பராமரிப்பு செலவினங்கள், அஞ்சல் மற்றும் தொடர்பாடல், மின்சாரம் மற்றும் ஏனையவற்றிற்கான செலவினங்கள் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **பாராளுமன்றத்தின் ஒரு கௌரவ உறுப்பினருக்காக பாராளுமன்ற தலைப்பின் கீழ் ஏற்பட்ட செலவினம்** | **பாராளுமன்றத்தின் ஒரு கௌரவ உறுப்பினருக்காக பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் ஊடக தலைப்பின் அமைச்சின் கீழ் ஏற்பட்ட செலவினம்** | **பாராளுமன்றத்தின் ஒரு கௌரவ உறுப்பினருக்காக ஏற்பட்ட மொத்த வருடாந்த செலவினம்** |
|---|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| 2012 | 7,274,416 | 84,992 | 7,359,408 |
| 2013 | 7,148,661 | 85,142 | 7,233,803 |
| 2014 | 7,396,104 | 93,807 | 7,489,911 |
| 2015 | 7,596,424 | 141,684 | 7,738,108 |
| 2016 | 8,369,516 | 205,888 | 8,575,404 |

(இ) 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையிலான 05 வருடங்களின் போது பாராளுமன்றத் தலைமை, உரிய அமைச்சு தலைப்பு கீழுள்ள பாராளுமன்ற கௌரவ மந்திரியொருவருக்காக ஏற்பட்ட மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு மற்றும் ஊடக தலைப்பு போன்றவற்றின் சம்பளங்கள், கூலிகள், படிகள், பதவியணி செலவினங்கள், போக்குவரத்து மற்றும் எரிபொருள், காகிதாகிகள், போக்குவரத்து செலவீனங்கள் உணவு மற்றும் குடிபானங்கள், அலுவலக பராமரிப்பு செலவினங்கள், அஞ்சல் மற்றும் தொடர்பாடல், மின்சாரம் மற்றும் ஏனையவற்றிற்கான செலவினங்களின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **பாராளுமன்றத்தின் ஒரு கௌரவ அமைச்சரிற்காக தலையின் கீழ் ஏற்பட்ட செலவினம்** | **பாராளுமன்றத்தின் ஒரு கௌரவ அமைச்சரிற்காக ஒவ்வொரு தலையின் கீழ் கீழ் ஏற்பட்ட செலவினம்** | **ஒவ்வொரு கைளரவ அமைச்சிற்காக பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் ஊடக தலைப்பின் அமைச்சின் கீழ் ஏற்பட்ட செலவினம்** | **ஒரு கௌரவ அமைச்சின் ஏற்பட்ட மொத்த வருடாந்த செலவினம்** |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா |
| 2012 | 6,574,422 | 23,906,640 | 84,992 | 30,566,054 |
| 2013 | 6,420,765 | 26,490,607 | 85,142 | 32,996,514 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2014 | 6,674,847 | 27,737,350 | 93,807 | 34,506,004 |
| 2015 | 7,054,526 | 25,506,983 | 141,684 | 32,703,193 |
| 2016 | 7,628,794 | 29,443,175 | 205,888 | 37,277,857 |

பாராளுமன்ற செயலாளர் நாயகம் பாராளுமன்ற ஒவ்வொரு கௌரவ உறுப்பினர் ஒருவரிற்காக ஒவ்வொரு பாராளுமன்ற தலைப்பின் கீழ் பாராளுமன்ற ஒவ்வொரு கௌரவ அமைச்சரிற்காகவும் ஏற்பட்ட செலவினத்துடன் இணங்க முடியும் எனவும் பாராளுமன்ற தலைப்பு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலுள்ள ஏனைய நிறுவனங்களின் செலவினங்களின் உள்ளடக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளதெனவும் கருத்துரை வழங்கினார்.

(ஈ) மீளாய்வாண்டின் போது தொன்னூற்று ஏழு பாராளுமன்ற அமர்வுகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் சட்ட அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற 30 அரச வர்த்தமானி வரைபுச் சட்டங்களில் 24 சட்டங்கள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

**3.10 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்றத்தால் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி மீதி ரூபா 876,886 ஆக இருந்தபோதும், வங்கி கூற்றின் பிரகாரம் வங்கி மீதி ரூபா 157,995 ஆக இருந்தது. இந்த ரூபா 718,891 தொகையான சாதகமற்ற மீதிகளுக்கான காரணங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் 2017 ஒக்தோபர் 23 இலும், இந்த மீதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியில் இருக்க வேண்டிய மீதியிலிருந்து ரூபா 718,891 தொகை குறைக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது.

**3.11 நிதி மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2014 ஆம் ஆண்டில் ரூபா 1,827,100 தொகைக்கும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,783,665 தொகைக்கும் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருளை உள்ளடக்கிய பல்வேறு வகையான பொருட்களை கொள்வனவு செய்த ஒரு நிறுவனத்திடமிருந்து ரூபா 1,761,741 தொகையான காகிதாகிகள், அலுவலக உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணம், மற்றும் கட்டிட பொருட்களை உள்ளடக்கிய 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டது. வழங்குனர்களால் வழங்கப்பட்ட முகவரியில் பொருட்கள் சேவைகளை வழங்குவதில் எந்தவொரு வணிகமும் ஈடுபட்டிருக்கவில்லை என நிறுவகத்தின் பௌதீக உள்ளகத் தன்மை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. ஆனால், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் பக்ஸ் இலக்கத்தை உள்ளடக்கிய 03 கடிதத் தலைப்புக்களை பயன்படுத்தி 02 வணிக பெயரின் கொடுக்கல் வாங்கல்களை வணிக இடம் மேற்கொள்கின்றது.

**3.12 நட்டங்களும் இழப்புக்களும்**

03 முன்னைய ஆண்டுகளில் ஏற்பட்ட 71 வாகன விபத்துக்களில் தெரிவு செய்யப்பட்ட 35 வாகன விபத்துக்களிலிருந்து ரூபா 2,316,559 பெறுமதியான சேதங்கள் ஏற்பட்டிருந்ததுடன், ரூபா 2,261,614 தொகை மாத்திரம் காப்புறுதி கம்பனிகளால் மீளச் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 54,945 நட்டம் ஏற்பட்டது.

**3.13 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வுப் பந்திகள்**

பாராளுமன்றத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்தால் தீர்க்கப்படாதிருந்த பந்திகளின் தொடர்பு கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | **தொடர்புடைய விடயம்** |
|---|---|---|
| 2015 | 3.2 (அ) | ஆட்சேர்ப்பு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் மற்றும் கணக்காய்விற்கான பதவியுயுர்வு தொடர்பான திட்டம் தொடர்பில் தகவல்கள் சமர்ப்பிக்காமை |
| 2015 | 3.2 (ஆ) | பாராளுமன்ற கட்டிட தொகுதி, பேச்சாளரின் வதிவிடம், மடிவெல வீடமைப்பு திட்டம் மற்றும் ஜயவடனாஹம வீடமைப்பு திட்டம் அமைந்துள்ள பிரதான கட்டிடங்களின் காணிகளின் உரிமையாண்மை சுவீகரிப்பு தொடர்பிலான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யாமை. |
| 2015 | 5.3 (அ) (v) | நிறுவனத்தின் மீளமைப்பானது விரைவில் அமுல்படுத்த வேண்டுமென 2008 மே 02 இன் டிஎஸ்எஸ்/சீ/4/பி/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தால் காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்கேற்ப செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 2013 | 1.6 (அ) (i) | அமைச்சரவையின் அங்கீகாரமில்லாமல் வருடாந்த சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக பாராளுமன்ற பதவியணியினருக்கு 10 சம்பள அதிகரிப்புக்களை வழங்கல். |

## 3.14 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாராளுமன்றத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவால் களஞ்சிய விநியோகப் பிரிவிற்கு 2011 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மென்பொருள் 2017 ஆகஸ்ட் 25 வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. நுகரத்தக்க பொருட்கள் பதிவேடுகள் களஞ்சியங்களில் பராமரிக்கப்பட்டிருந்ததுடன், அங்கே பெறுகைகள் மற்றும் வழங்கல்களில் பாரிய தொகைகள் மேற்கொள்ளப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன், அவைகளின் கிரய கணிப்பீடும் சாதகமற்றதாகவிருந்தது.

(ஆ) தாபன விதிக்கோவையின் XXIV பந்தியின் 3.5 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் அலுவலகரொருவரிற்கான சம்பள பட்டியலிருந்து மாதாந்த மொத்த கழிப்பனவுகள் சம்பனத்தின் 40 சதவீதத்திற்கு மேலாக இருத்தல் கூடாது. இதனை கருத்தில்கொள்ளாததுடன், கடன் தவணைக் கட்டணங்களிலிருந்தான கழிப்பனவிற்காக ஊழியர்களின் விருப்பத்தினை கோராமல் 02 நலன்புரி சங்கத்தால் 155 அலுவலர்களின் மாதாந்த சம்பளத்திலிருந்து 40 சதவீத எல்லையை விஞ்சி கடன் தவணைப்பணங்கள் கழிக்கப்பட்டிருந்தது.

## 3.15 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 56 | 54 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 162 | 142 | 20 |
| (iii) | இரண்டாம் நிலை | 236 | 190 | 46 |
| (iv) | ஆரம்ப நிலை | 474 | 440 | 34 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த/அடிப்படை) | 03 | 02 | 01 |
| | **மொத்தம்** | **931** | **828** | **103** |

பாராளுமன்றத்தின் அனைத்து பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகளின் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.